**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No.** 65/2023

2025-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ஆம் நாள் **பி.சா.3** சாட்சி **திரு.புட்டுசாமி** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **திரு.புட்டுசாமி** | தொழில் | : |
| த/பெ | : மல்லன் | கிராமம் | : பனஹள்ளி |
| வயது | : | தாலுக்கா | : தாளவாடி |

**பி.சா.3 : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**ஆவணங்கள் குறியீடு இல்லை.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நான்கு ஐந்து மாதங்களுக்கு முன்பு சாட்சி சொல்ல வந்த அன்று என்னை யாரும் கூப்பிடவில்லை அதனால் திரும்பி சென்றுவிட்டேன் என்றால் சரிதான். சாட்சி சொல்ல வந்த என்னை ஏன் திரும்ப அழைத்து செல்கிறீர்கள் என்று நான் பிரதிவாதிகளிடம் கேட்டதற்கு பிரதிவாதிகள் தக்க பதில் எதுவும் சொல்லவில்லை. தாவா பூமியை முதன் முதலாக கிரையம் வாங்கிய ராஜு என்பவர் எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது. அவர் எத்தனை வருடங்களாக இல்லை என்றால் சுமார் 35 வருடங்களாக இல்லை. ராஜு என்பவருக்கு இந்த கிராமத்தில் சொந்தமாக வீடு எதுவும்இல்லை என்றால் சரிதான். ராஜு தாவா பூமியில் எத்தனை வருடங்களாக சாகுபடி செய்துவந்தார் என்றால் ஐந்து வருடங்களாக சாகுபடி செய்து வந்தார். வழக்கு சொத்திற்கு தெற்கே வாதி வெள்ளக்குட்டியின் பூமி உள்ளது என்றால் சரிதான். அந்த பூமியை தற்போது யார் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் வாதி வெள்ளக்குட்டியும் சாகுபடி செய்வதில்லை. பிரதிவாதியும் சாகுபடி செய்வதில்லை. தரிசாக உள்ளது. எத்தனை வருடங்களாக மேற்படி பூமி தரிசாக உள்ளது என்றால் சுமார் 30 வருடங்களாக யாரும் சாகுபடி செய்யாமல் தரிசாக உள்ளது. சுமார் ஐந்து, ஆறு வருடத்திற்கு முன்னர் என்னுடைய பூமி ஒட்டினார் போல் உள்ள தாவா பூமியில் வெள்ளக்குட்டி ஆழ்துளை கிணர் போட்டுள்ளார் என்றால் சரிதான். வாதி ஆழ்துளை கிணர் அமைத்தபோது மேற்படி ஆழ்துளை கிணர் என்னுடைய பூமியில் போட்டுள்ளார் என்று வாதியிடம் நான் தகராறு செய்தேனா என்றால் இல்லை. என்னுடைய பூமியின் காலை எண் தெரியுமா என்றால் 72/1 ஆகும். வாதி மற்றும் பிரதிவாதியின் பூமியின் காலை எண் தெரியுமா என்றால் தெரியாது. வெள்ளக்குட்டி ஒன்றரை ஏக்கரும், ராஜுவிற்கும் ஒன்றரை ஏக்கர் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது வெள்ளக்குட்டியின் சொத்திற்கும் ராஜுவின் சொத்திற்கும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா அல்லது ராஜு சொத்திற்கு மட்டும்

போடப்பட்டுள்ளதா என்றால் வெள்ளக்குட்டியின் சொத்திற்கும் ராஜுவின் சொத்திற்கும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான்கு, ஐந்து மாதத்திற்கு முன்பு நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்தபோது என்னிடம் பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து பெற்றார்களா என்றால் இல்லை. நான் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு வருவதற்கு முன்னரே முதன்மை சாட்சிய பிரமாணம் பத்திரிக்கையை பதிவு செய்து வைத்திருந்தார்களா என்றால் இல்லை. நான் வந்த பின்னர் தான் பதிவு செய்தார்கள். நான் கன்னடத்தில் சொன்னதை தமிழில் யார் மொழிப்பெயர்த்தார்கள் என்றால் யார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்யும்போதும் அதில் கையெழுத்து செய்யும்போது நான், பிரதிவாதி, பிரதிவாதியின் வழக்கறிஞர் தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். வாதி வெள்ளக்குட்டி கிரையதாரரான ராஜுவின் மீதும், பிரதிவாதியின் கணவர் சுப்பிரமணி மீதும் 1995ம் வருடத்தில் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் இல்லை. பிரதிவாதியின் கணவர் சுப்பிரமணியின் தாயார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் மாமியார் முத்தம்மாள் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வெள்ளக்குட்டி தாவா பூமியில் ஆழ்துளை கிணறு அமைத்தபோது நானோ, பிரதிவாதியோ, பிரதிவாதியின் குடும்பத்தினரோ, வேறு நபர்களோ ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். தாவா பூமியைத்தவிர பிரதிவாதிக்கோ அவரது குடும்பத்தாருக்கோ தாவா கிராமத்திலோ, வேறு கிராமத்திலோ சாகுபடி பூமி எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது பூமியில் மழையில்லாத காரணத்தில் கடந்த ஒரு வருடமாக எந்தப்பயிரும் இடவில்லை தரிசாக உள்ளது என்றால் சரிதான். வெள்ளக்குட்டியும் பிரதிவாதியின் மாமியாரும் நீதிமன்றத்தில் வழக்கு நடத்திய விவரங்கள் பிரதிவாதியின் கணவர் சுப்பிரமணி சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றும் வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். தாவா பூமியை

கிரையம் பெற்ற ராஜு, கிரையம் பெற்ற தேதியிலிருந்து ஐந்து வருடங்கள் சாகுபடி செய்து வந்தார் என்றும், அதற்கு பின்னிட்டு இன்றைய தேதி வரை தாவா பூமியில் சாகுபடி எதுவும் செய்யாமல் தரிசாக உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. **மறுவிசாரணை இல்லை.**

( சாட்சிக்கு தமிழ்மொழி தெரியாது என்பதாலும், கன்னட மொழி தான் தெரியும் என்பதால் இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத வழக்கறிஞர் திரு.கார்த்திகேயன் அவர்களால் சாட்சிக்கு மேற்சொன்ன விவரங்கள் கன்னடத்தில் கேட்கப்பட்டு சாட்சி கன்னடத்தில் சொன்ன பதிலை தமிழ் மொழியில் மொழிப்பெயர்த்து அது இந்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. )

(மொழிப்பெயர்ப்பாளர்)

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.